**கனரா வங்கி**

திருச்சி ரோடு கிளை, கோயமுத்தூர்.

# விற்பனை அறிவிப்பு

**2002–ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்கச் சட்டம், விதி 8(6) & 9–ன் கீழ் விற்பனை அறிவிப்புக் கோருவதன் மூலம், அசையா சொத்துக்கள் ஏல விற்பனை அறிவிப்பு**

2002–ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல், நிதிச் சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் கீழ், சுவாதீனத்தில் எடுத்துக் கொள்ளப்பட்ட கீழே குறிப்பிடப்பட்டுள்ள அசையா சொத்துக்கள் ஏல விற்பனை செய்யப்பட உள்ளது குறித்த அறிவிப்பு இதன் மூலம் வழங்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| கடன் வழங்கியவர் பெயர் மற்றும் முகவரி | : | **கனரா வங்கி, திருச்சி ரோடு கிளை, கோயமுத்தூர் – 641 018** |
| கடன்தாரார் பெயர் மற்றும் முகவரி | : | **M/s. விஜயலட்சுமி அக்ரோ இண்டஸ்ட்ரீஸ், (உரிமையாளர் : திருமதி. C. சரஸ்வதி)** க/பெ. சென்னியப்பன், கிழக்கால தோட்டம், ஏரிபாளையம், தெக்கலூர் அஞ்சல், அவினாசி – 641 654. |
| கடன் பாக்கி 06–10–2010 வரை | : | ரூ.34,98,223.98 (ரூபாய் முப்பத்து நான்கு லட்சத்து தொண்ணூற்று எட்டாயிரத்து இருநூற்று இருபத்து மூன்று மற்றும் பைசா தொண்ணூற்று எட்டு மட்டும்) |
| ஏலத்தேதி மற்றும் நேரம் | : | **10–11–2010 மாலை 4.00 மணி** |
| ஏலம் நடைபெறும் இடம் | : | **கனரா வங்கி, திருச்சி ரோடு கிளை, கோயமுத்தூர் – 641 018.** |

## சொத்து விவரம் : அசையா சொத்தின் விபரம் :

**அயிட்டம் 1 :** கோயமுத்தூர் பதிவு மாவட்டம், அவினாசி துணைப் பதிவு மாவட்டம், அவினாசி தாலூகா, தெக்கலூர் பஞ்சாயத்து போர்டு எல்லைக்குள், தெக்கலூர் கிராமம், ஜி.எஸ்.எண்.709/2–ல் உள்ள 9.85 ஏக்கர் நிலம்.
எல்லைகள் : கிழமேல் பொது நடைபாதைக்கு வடக்கு, ரங்கசாமியின் பங்கு நிலங்களுக்கு மேற்கு, பழனிசாமியின் பங்கு நிலத்திற்கு கிழக்கு, மாரப்பன் மற்றும் பிறரின் நிலங்களுக்கு மற்றும் ரங்கசாமியின் பங்கு நிலங்களுக்கு தெற்கு.
இதன் மத்தியில் 0.91½ ஏக்கர் நிலம் மற்றும் ஜி.எஸ்.எண்.709/2B–ல் உள்ள 0.21 ஏக்கர் நிலத்தில் 0.02 ஏக்கர் பொது நிலம் பிற அனுபந்தங்களுடன். புதிய சர்வே எண்.709/2D, ஜி.எஸ்.எண்.709/2 (புதிய ஜி.எஸ்.எண்.709/2B) மற்றும் பொதுக் கிணறு, பிற அனுபந்தங்களுடன்.

**அயிட்டம் 2 :** தெக்கலூர் கிராமம், ஜி.எஸ்.எண்.709/2–ல் உள்ள நிலங்கள்.
எல்லைகள் : கருப்புசாமி கவுண்டரின் நிலங்களுக்கு கிழக்கு, ரங்கசாமி மற்றும் பிறரின் 5 சென்ட் தென்வடல் வண்டித் தடத்திற்கு மேற்கு, ஜி.எஸ்.எண்.709/2G–ல் உள்ள 12 அடி கிழமேல் பொது வண்டித் தடத்திற்கு வடக்கு, ரங்கசாமி மற்றும் பிறரின் மீதமுள்ள நிலங்களுக்கு தெற்கு. 0.14½ ஏக்கர் நிலம் அதற்கான பிற அனுபந்தங்களுடன். புதிய ஜி.எஸ்.எண்.709/2D.

**அயிட்டம் 3 :** தெக்கலூர் கிராமம், ஜி.எஸ்.எண்.709/2
எல்லைகள் : கிழமேல் நடைபாதைக்கு வடக்கு, கருப்புசாமி கவுண்டரின் பங்கு நிலங்களுக்கு மேற்கு, மாரப்ப கவுண்டர் மற்றும் பிறரின் நிலங்களுக்கு தெற்கு, கணபதி கவுண்டரின் பங்கு நிலங்களுக்கு மற்றும் பொது நிலத்திற்கு கிழக்கு.
இதன் மத்தியில் 0.41 ¼ ஏக்கர் நிலம். (புதிய எண்.709/2D), 0.21 ஏக்கர் நிலத்தில் 0.01¼ ஏக்கர் பொது நிலம் மற்றும் பொதுக் கிணற்றில் உரிமையுடன் மேலும் வடமேற்கு ரோட்டிலிருந்து ஜி.எஸ்.எண்.709/2 நிலங்கள் வரை உள்ள ரோட்டிற்குச் செல்லும் கிழமேல் நடைபாதையில் உரிமை மற்றும் பிற அனுபந்தங்கள் சகிதம்.
அயிட்டம் 1 முதல் அயிட்டம் 3 வரை சேர்ந்து மொத்தம் 1.50 ½ ஏக்கர் நிலம் மற்றும் அங்கு கட்டப்பட்டுள்ள தொழிற்சாலை கட்டிடம்.

## ரிசர்வ் விலை ரூ.82,50,000/-

**(ரூபாய் எண்பத்து இரண்டு லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்)**

## பிற விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் :

1. சொத்தானது '**உள்ளது உள்ளவாறு உள்ள இடத்தில் உள்ளவாறு**' என்கிற அடிப்படையில் வில்லங்கங்கள் ஏதேனும் இருப்பின் அவை உட்பட விற்கப்படும். (வங்கிக்குத் தெரிந்தவரை வில்லங்கங்கள் இல்லை. டேவணித் தொகையை செலுத்துவதற்கு முன் அதிகாரபூர்வ அதிகாரியை அணுகி வில்லங்கம் ஏதேனும் இருப்பின் அதைப் பற்றி விபரம் தெரிந்து கொள்ளலாம்)
2. ரிசர்வ் விலைக்கும் குறைவான விலைக்கு சொத்துக்கள் விற்பனை செய்யப்படமாட்டாது.
3. சொத்தினை எந்தவொரு வேலை நாளிலும் **காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை** பார்வையிடலாம்.
4. விருப்பமுள்ள ஏலதாரர்கள் டேவணித் தொகையாக **ரூ.8,25,000/– (ரூபாய் எட்டு லட்சத்து இருபத்து ஐயாயிரம் மட்டும்)** EMD ரிசர்வ் விலையில் 10 % Authorised Officer, Canara Bank, Trichy Road Branch, Coimbatore என்ற பெயரில் டிமாண்ட் டிராப்ட்–ஐ **09–11–2010 ம் தேதி மாலை 4.00 மணிக்குள்** சமர்ப்பிக்க வேண்டும்.
5. வங்கியின் முழு ஒப்புதலுக்குப் பிறகு வெற்றி பெற்ற ஏலதாரருக்கு விற்பனை உறுதி செய்யப்படும்.
6. வெற்றி பெற்ற ஏலதாரர் விற்பனை விலையில் (ஏற்கெனவே செலுத்தப்பட்ட டேவணித் தொகை EMD உட்பட) 25 % தொகையை விற்பனை உறுதி செய்யப்பட்ட அன்றே செலுத்த வேண்டும். மீதித் தொகையை விற்பனை உறுதி செய்யப்பட்ட நாளிலிருந்து 15 தினங்களுக்குள்ளாகச் செலுத்த வேண்டும். மேற்குறிப்பிட்டபடி செலுத்தத் தவறினால், அவரால் செலுத்தப்பட்ட டெபாஸிட் தொகையை அவர் இழக்க நேரிடும்.
7. பத்திர செலவு, பதிவுக் கட்டணம், சட்டப்படியான மற்ற செலவுகளை வெற்றி பெற்ற ஏலதாரரே ஏற்க வேண்டும்.
8. காரணம் எதையும் குறிப்பிடாமல் விற்பனை விதிமுறை நிபந்தனைகளை மாற்றம் செய்யவும், விற்பனையைத் தள்ளி வைக்க/ரத்து செய்ய அதிகாரபூர்வ அதிகாரிக்கு முழு உரிமையும் உண்டு.
9. மேலும் விபரங்களுக்கு எந்தவொரு வேலை நாளிலும் அலுவலக நேரத்தில் **கனரா வங்கி, திருச்சி ரோடு கிளை, கோயமுத்தூர் (தொலைபேசி எண்கள் 2300034, 2300873, 2302068)**–ல் தொடர்பு கொள்ளலாம்.

இடம் : கோயமுத்தூர்
தேதி : 07–10–2010

**அதிகாரபூர்வ அதிகாரி**
**கனரா வங்கி**

24x12

'Dinamalar'
Coimbatore Edition
08-10-2010 (Friday)